**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 140/2024**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | கண்ணகி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 26.02.2026.

**3 மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த வழக்கை எதற்காக போட்டுள்ளேன் என்றால் ஏகாம்பரத்தின் வாரிசு சான்று கேட்டு போட்டுள்ளேன். 1ஆம் பிரதிவாதி பட்டு, ஏகாம்பரத்திற்கு யார் என்றால் முதல் மனைவி. அம்சவேணி, பட்டுவின் மகள். எனக்கும் ஏகாம்பரத்திற்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் ஞாபகமில்லை. எனக்கும் ஏகாம்பரத்திற்கும் எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள் மீனா மற்றும் தீபா.

2. எனக்கு முதலில் திருமணம் நடந்ததா அல்லது பட்டுவுக்கு முதலில் திருமணம் நடந்ததா என்றால் பட்டுவுக்கு முதலில் திருமணம் நடந்தது. பட்டு உயிரோடு இருந்தபோது நான் ஏகாம்பரத்தை திருமணம் செய்துகொண்டதால் நான் அவருக்கு சட்டப்படியான வாரிசாக வரமுடியாது என்றால் சரியல்ல. ஏகாம்பரத்தின் அப்பா பெயர் சின்னப்ப கவுண்டர், அம்மா பெயர் வெள்ளியம்மாள். அவர்கள் உயிரோடு உள்ளார்களா என்றால் எனக்கு திருமணம் நடப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்கள்.

3. வாதிகள் 2 மற்றும் 3 மற்றும் பிரதிவாதிகள் 1, 2 ஆகியோர் தான் ஏகாம்பரத்தின் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். ஏகாம்பரத்தின் வாரிசு சான்றுகேட்டு தாசில்தாரிடம் மனு கொடுத்தது நான் தான் என்றால் சரிதான். நான் மனு கொடுத்தபோது உரிய விவரங்களையும் உரிய ஆவணங்களையும் கொடுக்காததால் மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா மற்றும் முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH — Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.